**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கடலாடி.**
**முன்னிலை : திரு.S.சாதுசிவசுப்பிரமணியன், பி.ஏ.,பி.எல்.**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்**
**நீதித்துறை நடுவர், கடலாடி.**

**2026ம் வருடம் பிப்ரவரி மாதம் 25 நாள் புதன்கிழமை**

**I.A.No.01/2023**
**in**
**O.S.No.108/2019**

வெள்ளைத்தாய் வகையறா ...மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

ராக்கம்மாள் வகையறா .... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

பிச்சையம்மாள் வகையறா
...எதிர்மனுதாரர்கள்/சேர்க்கப்படவேண்டிய 8 முதல் 13 பிரதிவாதிகள்

இந்த இடைநிலை மனு என் முன்பாக 25.02.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.பெரிசாமி அவர்கள் ஆஜராகியும், 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.சந்திரசேகரன் அவர்கள் ஆஜராகியும், தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இன்று வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

கடந்த 21.08.2022ம் தேதி வழக்கில் இறந்துபோன 6ம் பிரதிவாதிக்கு வாரிசு மனுதாக்கல் செய்யாததால் ஏற்பட்ட அபெட்மெண்டை ரத்து செய்ய ஏற்பட்ட 152 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து மனுவை கோப்பிற்கு எடுக்க உத்தரவிடக்கோரி காலவரையறை சட்டம் பிரிவு 5ன் கீழ் மனுதாக்கல்

செய்யப்பட்டுள்ளது.

2) **மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்.**

மனுதாரர் அசல் வழக்கின் 4ம் வாதி என்றும், மற்ற வாதிகளுக்காகவும் நானே இந்த அபிடவிட்டை தாக்கல் செய்வதாகவும் வழக்கின் 6ம் பிரதிவாதியான ஆறுமுகம் கடந்த 21.08.2022ம் தேதி இறந்து விட்டதாகவும், 6ம் பிரதிவாதி இறந்த விபரத்தை நீதிமன்றத்திற்கு தெரிவித்து வாரிசு நடவடிக்கை எடுக்க வேண்டிய விபரம் தெரியாததாலும், மஞ்சல் காமாலை நோய் ஏற்பட்டு காரைக்குடி கழனிவாசலில் நாட்டு வைத்திய சிகிச்சை எடுத்து வந்ததால் வழக்கறிஞரை சந்தித்து இறந்த விபரத்தை நீதிமன்றத்திற்கு காலகாலத்தில் வாரிசு நடவடிக்கை எடுக்காமல் வழக்கு அபெட் ஆனதை ரத்து செய்ய ஏற்பட்ட 152 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து மனுவை கோப்பிற்கு எடுக்க உத்தரவிடக்கோரி மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) **எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்.**

மனுவில் கூறியுள்ள சங்கதிகள் மறுக்கப்படுகிறது என்றும், மனுதாரர்கள் மனுவில் 152 நாட்கள் காலதாமதமாக மனுவை தாக்கல் செய்துள்ளார்கள். மேற்படி 152 நாட்கள் காலதாமத்திற்கு மனுவில் சொல்லியுள்ள காரணம் எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது என்றும், வழக்கு விவரங்கள் அனைத்தையும் தெரிந்துகொண்டு மனுவில் காலதாமதமாக தாக்கல் செய்துள்ளார்கள். எனவே இந்த மனுவை எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் வழக்கை இழுத்தடிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் மனுவை தாமதமாகத் தாக்கல் செய்துள்ளார். Each and every day shouble be explained என்பது விதியாகும் மனுதாரர் காலதாமத்திற்கு காரணம் எதுவும் குறிப்பிடவில்லை எனவே 152 நாட்கள் காலதாமதத்தை மன்னிக்கும் அளவிற்கு போதிய காரணங்கள் இல்லாததால் மனுவை அதிக பட்ச செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யக்கோரி எதிருரை தாக்கல்

செய்யப்பட்டுள்ளது.

4) இந்த இடைநிலை மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில் மனுதாரர் கோரியுள்ள பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதா? என்பதேயாகும்.

இம்மனுவில் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. ஆவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

5) இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

அசல் வழக்கானது விளம்புகை மற்றும் உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி கடந்த 26.04.2017ம் தேதி தாக்கல் செய்யப்பட்டு விசாரணைக்காக நிலுவையில் இருந்து வருகிறது. வாதி தரப்பு சாட்சியத்திற்காக வாய்தா ஏற்பட்டுள்ள நிலையில், 6ம் பிரதிவாதி இறந்த விபரம் தெரிந்து வாதி தரப்பில் கடந்த 31.07.2023ந் தேதி வாரிசு நடவடிக்கை எடுப்பதற்கு 152 நாட்கள் காலதாமதமாக மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி அபெட்மென்டை ரத்து செய்வதற்கு மனுதாரர்கள் தரப்பில் மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி காலதாமத நாட்களாக மனுவில் 152 என குறிப்பிடப்பட்டு அதிகமான காலதாமதத்துடன் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எதிர்மனுதாரர்கள் தரப்பில் 152 நாட்கள் காலதாமதத்திற்கு முறையான காரணங்கள் சொல்லப்படவில்லை என ஆட்சேபனை செய்யப்பட்டுள்ளது.

மனுதாரர்கள் தரப்பில் கூறியுள்ளதுபோல் காலதாமதத்திற்கு வாதி வெளியூர் சென்று விட்டதாலும், வழக்கறிஞரை சந்தித்து தகவல் தெரிவிக்கவில்லை என காரணங்கள் குறிப்பிடப்பட்டிருந்தாலும், அசல் வழக்கின் விசாரணையானது 9 ஆண்டுகளாக நிலுவையில் இருந்து வருவதால், பிரதிவாதிகள் தரப்பிற்கு ஏற்படும் காலவிரயத்தினை கருத்தில் கொண்டு மனுவை செலவுத்தொகைவுடன் அனுமதிப்பதே நீதியின் நலனுக்கு உகந்தது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

இம்மனுவின் செலவுத்தொகையாக மனுதாரர் ரூ.2,000/–யை 2 முதல் 5ம் எதிர்மனுதாரருக்கு வரும் 04.03.2026ம் தேதிக்குள் செலுத்தும்பட்சத்தில் மனு அனுமதிக்கப்படும் என்றும், தவறும்பட்சத்தில் மனு தள்ளுபடி செய்யப்படும் என உத்தரவிடப்படுகிறது.

அழைக்க 06.03.2026

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு 25.02.2026 இன்று அவையறிய பகரப்பட்டது.

SADHU SIVA SUBRAMANIAN
Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2026.02.25 15:30:26 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி.

**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>:** இல்லை

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>:** இல்லை

SADHU SIVA SUBRAMANIAN
Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2026.02.25 15:30:31 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி.